# பிரிவு 4 - வயது 14 முதல் 16 வரை

பாடல் : 1

தலம்: திருஇலம்பையங்கோட்டூர் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளியது
பண் : குறிஞ்சி தாளம் : ஆதி

பாலனாம் விருத்தனாம் பசுபதிதானாம் பண்டுவெங்கூற்றுதைத்து அடியவர்க்கு அருளும்
காலனாம் எனதுரை தனதுரையாகக் கனலெரி அங்கையில் ஏந்திய கடவுள்
நீலமா மலர்ச்சுனை வண்டுபண்செய்ய நீர்மலர்க்குவளைகள் தாதுவிண்டு ஓங்கும்
ஏலநாறும்பொழில் இலம்பையங்கோட்டூர் இருக்கையாப் பேணி என் எழில் கொள்வதியல்பே.
1.76.3

பாடலின் பொருள்:

பால வடிவோடும், முதிய வடிவோடும் வரும் பசுபதி என்னும் பெருமான் முற்காலத்தில் கொடிய கூற்றுவனை உதைத்து மார்க்கண்டேயருக்கு அருள்புரிந்த காலகாலன். தன்னுடைய உரைகளை என் உரைகளாக வெளிப்படுத்தியவன். கையில் விளங்கும் எரியை ஏந்திய கடவுள். அத்தகைய இறைவன் நீல நிறம் பொருந்திய சிறந்த குவளை மலர்கள் மகரந்தம் விண்டு மணம் பரப்பும் பொழில்கள் சூழ்ந்த இலம்பையங்கோட்டூரைத் தனது இருப்பிடமாகக் கொண்டுள்ளான். அவனை வழிபட வந்த என்னைக் கவர்ந்து கொள்வது முறையோ?

பாடல் : 2

தலம்: திருமயிலாப்பூர் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளியது
பண் : சீகாமரம் தாளம் : ஆதி

மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு
அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய். 2.47.1

பாடலின் பொருள்:

பூம்பாவாய்! தேன்பொருந்திய அழகிய புன்னை மரச்சோலைகள் சூழ்ந்ததும், இளமயில்கள் ஆரவாரிப்பதுமான ஊரில் உள்ள கபாலீச்சரம் என்னும் கோயிலில் விருப்பத்தோடு அமர்ந்தவன் மீது நெருக்கமான அன்புடைய மாகேசுரர்களுக்குத் திருவிழாக்காலங்களில் அன்பர்கள் அமுது செய்விக்கும் காட்சிகளைக் காணாது செல்வது முறையோ?

## பாடல் : 3

தலம்: திருப்பழனம் | திருநாவுக்கரசு நாயனார் அருளியது
பண் : பழந்தக்கராகம் | தாளம் : ரூபகம்

மண்பொருந்தி வாழ்பவர்க்கும் மாதீர்த்த வேதியர்க்கும்
விண்பொருந்து தேவர்க்கும் வீடுபேறாய் நின்றானைப்
பண்பொருந்த இசைபாடும் பழனம் சேர் அப்பனை
என் கண்பொருந்தும் போழ்தத்தும் கைவிடநான் கடவேனோ . 4.12.5

பாடலின் விளக்கம்:

இம்மண்ணுலகில் பொருந்தி உலக இன்பமே கருதி வாழ்கின்றவருக்கும் மேம்பட்ட தூய்மையை உடைய வேதியர்க்கும் வானத்தில் இருக்கும் தேவர்களுக்கும் இன்பப் பேறுமாய் நிற்பவன் சிவபெருமான். சான்றோர்கள் பண்ணொடு பொருந்த இசைபாடும் திருப்பழனத்தில் உறையும் பெருமானை உயிர் நீங்கிக் கண் மூடும் நேரத்திலும் கைவிடக் கூடியவனோ?

## பாடல் : 4

தலம்: திருவாவடுதுறை | நம்பி ஆரூரர் அருளியது
பண் : தக்கேசி | தாளம் : ஆதி

வான நாடனே வழித்துணை மருந்தே
மாசிலா மணியே மறைப் பொருளே
ஏனமாயயிரு ஆமையும் எலும்பும்
ஈடு தாங்கிய மார்புடை யானே
தேனெய் பால்தயிர் ஆட்டுகந் தானே
தேவனே திரு ஆவடு துறையுள்
ஆனை யேஎனை அஞ்சல் என்றருளாய்
ஆர் எனக்கு உறவு அமரர்கள் ஏறே. 7.70.9

பாடலின் விளக்கம்:

விண்ணெல்லாம் நிறைந்தவன். செல்லும் வழிக்குத் துணையாகும் அமுதம் போன்றவன், குற்றமில்லாத மாணிக்கம் போன்றவன், வேதத்தின் பொருளானவன், பன்றியின் பெரிய கொம்பினையும், ஆமை ஓட்டையும், எலும்பையும், அணிகளாகத் தாங்கியவன். ‘தேன், நெய், பால், தயிர்’ இவற்றால் ஆடுபவன், திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கின்றவன். விலங்குகளில் ஆண் சிங்கமாய் உள்ளவன். இப்பெருமான் ‘அஞ்சேல்’ என்று சொல்லித் தேற்றும் உறவும் ஆவான்.

<u>பாடல் : 5</u>

திருவாசகம் திருவாதவூரடிகள் அருளியது

இராகம் : மோகனம்

கொள்ளேன் புரந்தரன் மால் அயன் வாழ்வு
குடிகெடினும்
நள்ளேன் நினது அடியாரொடு அல்லால்
நரகம் புகினும்
எள்ளேன் திருவருளாலே இருக்கப்
பெறின் இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லாது எங்கள்
உத்தமனே

பாடலின் பொருள்:

எங்கள் மேலோனே! தலைவனே! உன் திருவருளோடு கூடி இருக்கப் பெறுவேனாயின், இந்திரன், திருமால், பிரமன் ஆகிய இவர்களுடைய வாழ்வு கிடைத்தாலும் ஏற்க மாட்டேன். எனது குடி அழிந்தாலும் உன் அடியாரோடன்றிப் பிறரோடு நட்பு கொள்ள மாட்டேன். நரகத்திற் புகுந்தாலும் அதனை இகழமாட்டேன். உன்னை அன்றி வேறு தெய்வங்களை மனத்தாலும் நினைக்க மாட்டேன்.

<u>பாடல் : 6</u>

பதினோராம் திருமுறை – திருப்பொன்வண்ணத் தந்தாதி சேரமான் பெருமாள் நாயனார்அருளியது

இராகம் : கம்பீரநாட்டை தாளம்: ஐம்மைநடை

பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மேனி பொலிந்திலங்கும்
மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
வீழ்சடை வெள்ளிக்குன்றம்
தன் வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மால்விடை தன்னைக்கண்ட
என்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
ஆகிய ஈசனுக்கே. 11.6.1

பாடலின் பொருள்:

இறைவனைக் கண்ட எனது மேனியின் நிறம் எந்த நிறமாயிற்றோ அந்த நிறத்தையே தனது இயற்கை நிறமாக உடைய இறைவனின் மேனி, எப்பொழுதும் பொன்னின் நிறம்.

தாழ்ந்து தொங்குகின்ற சடைகள், விட்டு விளங்குகின்ற மின்னல் நிறம்.

பெரிய இடப ஊர்தி, வெள்ளி மலை போன்ற நிறம். இறைவனும் அந்த நிறமே உடையவன்.